# சிறிலங்கா ...

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

சர்வதேச கிறிமினல் நீதிமன்றில் சாட்சியமளிப்பவர்களுக்குரிய பாதுகாப்பு இவ்வாறு உறுதிப்படுத்திருக்கும்போது சிறிலங்கா இன அழிப்பாளர்களுக்கு எதிராக வழக்கு தொடர மிகப் பெரிய அளவு பணம் வேண்டுமென்பதும்- சாட்சியங்கள் முன்வரவேண்டுமென்றெல்லாம் பரப்புரைகள் செய்வது சர்வதேச கிறிமினல் நீதிமன்றத்தின் தார்ப்பரியங்களுக்கு அப்பாற்பட்டதாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து பின்பு பிரித்தானியாவில் குடிவரவு தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிறைவைக்கப்பட்டிருந்த கருணாவுக்கு எதிராக இலங்கையில் இடம்பெற்ற பல மனித உரிமை மீறல்கள் அடிப்படையில் வழக்கு தொடரப்பட வேண்டுமென பல்வேறு திசைகளிலிருந்தும் கோரிக்கைகள் வந்ததை ஊடகங்கள் மூலம் அறியக்கிடந்தது.

இப்போது கருணா திரும்பவும் இலங்கைக்கு நாடு கடத்தபப்டவிருப்பதாகவும் அவர் அங்கு கிழக்கு மகாணத்தின் முதலமைச்ராக நியமிக்கப் படவிருக்கின்றார் என்றும் இப்போது ஊடக செய்திகள் கூறுகின்றன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) ஆகிய சர்வதேச அமைப்புக்களுடன் பல உள்ளூர் நிறுவனங்களும் கருணாவை சர்வதேச கிறிமினல் நீதிமன்றிலோ அல்லது பிரித்தானியாவின் நீதிக் கட்டமைப்புக்குள்ளேயோ நிற்பாட்ட முடியுமென எதிர்பார்த்தார்கள். எதுவுமே நடக்கவில்லை.

இதற்கு இப்போது பல்வேறு காணங்களை இரகசியமாகவும் சிலர் பகிரங்கமாகவும் கூற தொடங்கியிருக்கின்றார்கள். இவற்றில் ஒரு காரணம் கருணாவுக்கு எதிராக பலநூறு குற்றச்சாட்டுகள் இருந்தாலும் அவற்றை நிரூபிப்பதற்கு பாதிக்கப்பட்டவர்கள் முன்வராத காரணத்தினால்தான் அவருக்கு எதிராக வழக்கு தொடர முடியவில்லையென கூறப்படுகின்றது. கருணா குற்றங்களுக்கு பொறுப்பானவரா அல்லது இல்லையா என்பது இங்கு முக்கியமில்லை. ஆனால் அவருக்கு எதிராக இலங்கைக்கு வெளியில் வழக்கு தொடரப்பட்டு அவரை சட்டத்தின் முன் நிறுத்த முடியுமா என்பதுதான் முக்கியம்.

> **சிறிலங்காவில் கடந்த மூன்று சகாப்த காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் இன அழிப்பு மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பாக இருந்தவர்கள் இதுவரை சர்வதேச மட்டத்திலோ அல்லது தேசிய மட்டத்திலோ நியாயமான முறையில் விசாரணைகள் செய்யப்பட்டதும் இல்லை தண்டிக்கப்பட்டதும் இல்லை.**

கருணா சிறிலங்காவுக்கு திருப்பியனுப்பப் படவிருக்கின்றார் என்பதனை அறிந்த சர்வதேச மன்னிப்புச் சபை, கருணாவுக்கு எதிரான குற்றங்களை இலங்கையிலே விசாரிக்கப் படவேண்டுமெனவும், கருணா இழைத்த குற்றங்கள் இலங்கை மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இது இலங்கை நீதிமன்ற கட்டமைப்புத் தொடர்பான பரிட்சிப்பாகவும் இருக்கும் என்று மிகத் தெளிவான கருத்தை கூறியிருக்கின்றது.

கருணாவுக்கு எதிரான மனித உரிமைகளை வரிசைப்படுத்தி தனது அறிக்கை பலவற்றை வெளியிட்ட அமெரிக்காவை தளமாக கொண்டுள்ள மனித உரிகைள் கண்கானிப்பு அமைப்பு (Human Right Watch) கருணா செய்த குற்றங்களுக்கு எதிராக பிரித்தானியாவில் வழக்கு தொடர வேண்டுமென்ற தனது மொட்டையான வேண்டுகோளை விடுத்ததுடன் நின்றுவிட்டது.

சிறிலங்காவில் கடந்த மூன்று சகாப்த காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டுவரும் இன அழிப்பு மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பாக இருந்தவர்களுக்கு இதுவரை காலம் சர்வதேச மட்டதிலோ அல்லது தேசிய மட்டத்திலோ விசாரணைகள் செய்யப்பட்டதும் இல்லை அவர்கள் எப்போதுமே தண்டிக்கப்பட்டதும் இல்லை.

1983 ஆண்டு யூலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா சிங்கள இராணுவத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுக்கு பொறுப்பாக இருந்த அப்போதைய ஜனாதிபதிக்கு எதிராக சர்வதேச கிறிமினல் நீதிமன்றில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இக்கலவரத்தில் சுமார் 3000 அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

கொழும்பிலும் மற்றைய இடங்களிலும் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் சிறிலங்கா ஆயுதப்படையினர் நேரடியாகவும்- மறைமுகமாகவும் ஈடுப்பட்டதிற்கான சான்றுகள் தேடப்பட்டு சகல பாதுகாப்பு படையினருக்கும் பொறுப்பானவர் சிறிலங்காவின் ஜனாதிபதி என்பதினால் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா உட்பட பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் திரு அத்துலத்முதலி போன்றோருக்கும் மற்றும் பாதுகாப்பு படைகளின் தலைவர்களுக்கும் எதிராக குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்டு இந்த சர்வதேச கிறமினல் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கபட்டது.

இந்த குற்றப்பத்திரிகையை பரிசீலணை செய்த சர்வதேச கிறிமினல் நீதிமன்றம் சிறிலங்கா பிரஜைகளை இந்த நீதிமன்றத்தின் முன்பு கொண்டுவரமுடியாதென்ற அடிப்படைக் காரணத்தை முன்வைத்து விசாரிக்க முடியாதென்று கூறினாலும் அந்த குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கபட்டுள்ள குற்றங்கள் மிகவும் செறிவுள்ளமை எனவும் எதிர் காலத்தில் ஏற்படும் மாற்றங்களை முன்வைத்து அவை சிலவேளை மறுபரிசீலணை செய்யப்படலாமென்பதற்காக அவை பாதுகாப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தது.

சர்வதேச கிறிமினல் நீதிமன்று ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்றுவரை அது பல நாடுகளின் கிறிமினல் தலைவர்களை சிறைக் கூடங்களில் இந்த நீதிமன்றம் அடைத்திருக்கின்றது. அதேவேளை இந்த சட்டத்தின் ஓட்டைகளை தெரிந்து கொண்ட சிறிலங்காவைப போன்ற சில நாட்டு தலைவர்கள் தனது நாட்டு மக்களுக்கு எதிரான குற்றங்களை செய்துவிட்டு சட்டத்தலிருந்து தப்பித்துக் கொண்டதாக நினைக்கின்றர்ாகள்.

சர்வதேச கிறிமினல் நீதி விசாரணைகள் தொடர்பான சர்வதேச சட்டங்கள் எப்போதுமில்லாதவாறு தற்போது புதிய பரிமாணங்களை எடுத்துள்ளது. உலக அரசியலில் இன்று நண்பர்களாக இருப்பவர்கள் நாளை எதிரியாக மாறி விடுகின்றார்கள். இந்த கோட்பாடு சிறிலங்காவில் இனப்படுகொலைகளை செய்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கும் அவர்களது பரிவாரங்களுக்கும் விதிவிலக்கல்ல.

கோசாவிலும் சுடானிலும் ருவண்டாவிலும் மனித உயிர்களை மதிக்க தவறிய தலைவர்கள் தாங்கள் செய்த காரியங்களுக்காக ஒரு நாள் பதில் சொல்லியாக வேண்டுமென்பதை மறந்துதான் தங்களது ஆட்டத்தை நடத்தினார்கள்.

சிறிலங்காவின் தலைவர்கள் தங்கள் நாட்டு மக்களுக்கு செய்த அந்த அநியாயங்களுக்கான தண்டனையிலிருந்து இப்போது வேண்டுமென்றால் தப்பித்துக் கொள்ளலாம்.

சர்வதேச கிறிமினல் நீதிமன்றின் பிரதான வழக்கு தொடருநர் திரு லுயிஸ் மொறிநோ அவர்கள் அண்மையில் மத்திய ஆபிரிக்கா நாட்டு மக்களுக்கு கூறிய ஆறுதல் வார்த்தைகள் இன்னல்படும் ஈழத்தமிழருக்கும் பொருந்தும்.

‘மத்திய ஆபிரிக்கா குடியரசு நாட்டுமக்கள் ஒன்றை நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும் அதாவது உலகம் உங்களை மறந்து விடவில்லை.’

ஆம் காலம் போனாலும் உலகம் ஈழத் தமிழர்களை மறந்துவிடாது.


## சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"...This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

*- Karen Sommers*

# ELC Solicitors
Understanding your needs...

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

**SPECIALISTS IN:**

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

ELC Solicitors
Understanding your needs...

**COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE**

**CALL US TODAY!**

**0800 027 8977**

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE
www.elcsolicitors.com